# கண்ணனின் பரியமான வார்த்தைகள்

எனதுப்ரியாமான பக்தர்களே, உங்களிடம் எனக்கு அபாரமான அன்பும் வாத்ஸல்யமும் உள்ளது. நான் உங்களைப் படைத்து நீங்கள் விரும்பிய பொருள்களை அடைவதற்கும், அதிருஷ்டங்களை நீக்குவதற்கும் வழிதைத் தெரிவிக்கும் சாஸ்த்ரம் என்னும் ப்ரமாணத்தையும் கற்பித்துக் கொடுத்தேன். ஆனல் எனது சங்கல்ப விரோதமான உங்களது ஸ்வச்சந்த நடத்தையால் அது தடைபடுகிறது. ஆகவேநீங்கள் அத்தகைய காரியங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

எனது ஸ்ருஷ்டி எனக்கு மிகவும் அந்தரமாகவும் ப்லியமாகவும் உள்ளது. பகவத் ப்ராப்தி ரூபமான மோக்ஷம் ஒன்றையே விரும்பி பகவான் ஒருவனையே சரணமாக அடையுங்கள் என உங்களுக்கு கீதாசார்யனாக உபதேசமும் அளித்துள்ளேன். நீங்கள்அனுஷ்டிக்கப்பட வேண்டிய தர்மங்களையும் செயல் முறையில் ஸௌகர்யமாக அறிந்துகொண்டுசெய்வதற்காகவே சாஸ்திரத்தையும் நானே அருளினேன். நீங்கள் நான்படைத்த இயற்கை அழகை அழிக்காமல் ரசித்து, ஒருவர் மற்ஹொருவருடன் ஸ்நேகபாவத் துடன் பழுகி அன்பை மட்டுமே நீலைநாட்டவேண்டும்.

எனக்குப் பிடித்த மானவைகளில், சாத்விகமான பிரார்தள்களும், நித்ய கர்மாக்களை விடாமல் செய்வதும், பலனை எதிர்நோக்காமல் தான தருமங்களை உரியவர்களுக்கு செய்வதும் முக்கியமானவை ஆகும். ஆனல் நீங்களோ கொடிய அறியாமை என்னும் காரிருளில் சிக்குண்டு நாம் எங்குருந்து வந்தோம், எங்குசென்று கொண்டிருக் கின்றோம், எங்கு செல்லம் போகிறோம், எங்குசெல்ல வேண்டும் என்பதைப்பற்றி அறியாமலும் எண்ணற்ற முன்பிறவிகளில் அறிந்தும் அறியாமலும் புலன்கள் விரும்பி அழைத்துச் சென்ற வழிகளிலெல்லாம் ஓடியாடித்திரிந்து செய்தபல நன்மை தீமை செயல்களின் பலனாய் கிடைத்த ப்ராரப்த, ஆகாமி, ஸஞ்சிதம் எனப்படும் மூன்று வகைத் தாபங்களை அடுத்தடுத்த பிறவிகளில் அனுபவித்துக் கொண்டும் பிறப்பதும் தாபங்களை அடுத்துடுத்த பிறவிகளில் அனுபவித்துக்கொண்டும் பிறப்பதும் இறப்பதுமான வட்டத்திலேயே அழன்று கொண்டிருக்கிறெர்கள். இத்துயரங்கள் முற்றிலுமாக தீர்ந்து போவதற்கான வழிவகைகளே எனக்குபிடித்தமானவைகளாகக் கூறியுந்ளேன். நீங்கள் இதை உணர்ந்து அதன்படி நடந்து இந்த ஸம்ஸாரக் கடலிலிருந்து எதிர்நீச்சல்போட்டு மோட்சத்தை அடைய வேண்டும் என எதிர்ப்பார்க்கிறேன்.

இந்த உலகத்தில் நான் எங்கும் நிறைந்து எல்லோருடைய இதயத்திலும் இருக்கிறேன். உங்கள் இதயத்தில் நிறைந்துள்ள திவ்யமான அன்பே நான். எனவே நற்காரியங்களில் மன நிறைவோடு ஈடுபடுங்கள். நான் உங்களுடன் இருந்து அனைத்தையும் சுலபமாக முடித்துவைப்பேன். நீங்கள் உங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களிடமும் உற்றவர்களிடமும் நேசமுடன் பழகுவ்கள் நான் உங்களில் ஒருவனாக இருந்து உங்கள் வெற்றிக்கு உறுதுணையாக இருப்பேன். எனவே அக்ஞானத்தை அகற்றி ஞான வழியில் செல்லுங்கள். உங்கள் அனைத்துக் குறைகளையும் விலக்கி அன்பு என்னும் ஞான மார்க்கத்தில் செல்லும் போது நான் உங்களது வாழ்க்கையில் எல்லா சௌபாக்யங்களையும் நிறைத்து வழங்குவேன். முக்கியமாக ப்ரபத்தியை வழங்குவேன்.

இங்ஙனம்
தங்களது கண்ணன்

This message is brought to you by **sssvijayamission.com**

இந்த உலகத்தில் நான் எங்கும் நிறைந்து எல்லோருடைய இதயத்திலும் இருக்கிறேன். உங்கள் இதயத்தில் நிறைந்துள்ள திவ்யமான அன்பே நான். எனவே நற்காரியங்களில் மன நிறைவோடு ஈடுபடுங்கள். நான் உங்களுடன் இருந்து அனைத்தையும் சுலபமாக முடித்துவைப்பேன். நீங்கள் உங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களிடமும் உற்றவர்களிடமும் நேசமுடன் பழகுவ்கள் நான் உங்களில் ஒருவனாக இருந்து உங்கள் வெற்றிக்கு உறுதுணையாக இருப்பேன். எனவே அக்ஞானத்தை அகற்றி ஞான வழியில் செல்லுங்கள். உங்கள் அனைத்துக் குறைகளையும் விலக்கி அன்பு என்னும் ஞான மார்க்கத்தில் செல்லும் போது நான் உங்களது வாழ்க்கையில் எல்லா சௌபாக்யங்களையும் நிறைத்து வழங்குவேன். முக்கியமாக ப்ரபத்தியை வழங்குவேன்.

இங்ஙனம்
தங்களது கண்ணன்

***SHRI KRISHNA'S***
***'MESSAGE OF LOVE/ PREM SANDESH'***
***brought to you by Vijaya Krishna***

**VIJAYA MISSION**
***#52 / 42, Central Street, 8-9th Cross,***
***Railway Parallel Road, Kumarapark West,***
***Bengalore-560020.***
*Tel - 080-23449165 / +91 988 000 1828*
*E-mail: krsna1828@gmail.com*
*www.sssvijayamission.com*